**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 312/2022**
**வழக்கு சாட்சி – அ.சா. 7 (பட்டியல் சாட்சி –9 ).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. தீபக் பிரபு. | ஜாதி | |
| தந்தை பெயர் | சின்னாத்தேவர். | தொழில் | ஓட்டுநர். |
| கிராமம் | பாலார்பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 34/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.07.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, பாலார்பட்டியில் குடியிருந்துகொண்டு, ஓட்டுநராகப் பணி செய்து வருகிறேன். தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அது ஏற்கனவே **அ.சா.ஆ. 2** ஆகக் குறியீடு செய்யப்படுள்ளது. கடந்த 10.01.2021 ஆம் தேதியன்று, இரவு 11.00 மணிக்கு மேல் பாலார்பட்டிக்கு வெளியில் உள்ள டீக் கடைக்கு அருகே போலீசார் அங்கு வந்து, அதற்கு முன்னதாக அங்கு நடந்த விபத்து சம்பந்தமாக விசாரித்து, படம் வரைந்து, எழுதிக்கொண்டார்கள். அதில் நானும், ராஜேஸ் என்பவரும் கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

11.00 மணிக்கு சம்பவயிடத்தை காட்டச் சொல்லி போலீசார் என்னை அழைத்தார்கள் என்றால், சரிதான். போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கிய பேப்பரில் என்ன என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியுமா? என்றால், தெரியவில்லை. வழக்கு விபத்து இறந்துபோன செல்வேந்திரன் எனது ஊரைச் சேர்ந்தவர் என்றால், சரிதான். சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றாலும், பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து

தயாரித்த பேப்பரில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.13 15:45:18 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**